1973 மார்ச் 31]

(2) அவைக் கூட்டத் தேதியில் மாறுதல்.

MR. CHAIRMAN : I have to announce to the House that the Legislative Council will meet on the 5th April 1973, if necessary, and consider Government Bills.

3. கவன ஈர்ப்பு

"வட ஆற்காடு மாவட்டத்தில் வறட்சி, மின்சாரத் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகளிடம் கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதில் நிர்ப்பந்தத்தைத் தவிர்ப்பது, பயிர்வாரி கடனை மத்திய கால கடனாக மாற்றுவது குறித்து.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்:—

"வட ஆற்காடு மாவட்டத்தில் கடந்த ஆண்டு வறட்சியின் காரணமாகவும் தற்போது மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாகவும் விவசாயிகளுக்கு போதிய வருவாய் இல்லாமையினால் வாங்கிய கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதில் தீவிரம் காட்டி விவசாயிகள் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியிருப்பதைத் தவிர்க்க, பயிர் வாரி கடனை மத்திய கால கடனாக மாற்ற அரசு ஆணையிட வேண்டுதல் குறித்து."

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் சில பகுதிகள் வறட்சியால் பாதிக்கப் பட்டன என்று அறிவிக்கப்பட்ட உடனேயே விளைச்சல் 6 அணாவுக்குக் குறைவாக உள்ள இடங்களிலுள்ள பகுதிகளில் கூட்டுறவுக் கடன்கள் தள்ளி வைக்கப்பட வேண்டுமென்று வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி, ஜூன் 72 முதல் மார்ச் 73 வரை ரூ. 46,75,000 அளவுக்கு கடன்கள் தள்ளி வைக்கப்பட்டன. மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களில் விளைச்சல் 6 அணா வுக்குக் குறைவு என்று அணாவாரி சான்றிதழ் வழங்கப்படாமலிருந் தாலும் கூட, கடன் வசூலிப்பதில் கோயர்சிவ் நடவடிக்கைகளை மேற் கொள்ளக் கூடாது என்று அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. மின் வெட்டால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடன் தள்ளி வைக்கப் பட்டதோடுமட்டுமல்லாமல் 30—6—1973 வரை கெடுபிடி நட வடிக்கை—கோயர்சிவ் ஆக்ஷன்—மேற்கொள்ள வேண்டாமென்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் சில சிற்றூர்களில் அரசின் ஆணையைத்